OPEN ACCESS

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.05.2020

Accepted: 10.06.2020

Published: 01.07.2020

Citation:
Sridevi, P. (2020). Kalainjar M. Karunanidhi's Thirukkural Commentary & A Critical Study. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 56–66.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.2406

*Corresponding Author:
srivenki2000@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kalainjar M. Karunanidhi's Thirukkural Commentary & A Critical Study

**Dr. P. Sridevi**
*Head & Assistant Professor of Tamil*
*S.R.N.M. College, Sattur, Tamil Nadu, India*

**Abstract** - Thirukural is a classic Tamil text consisting of 1330 couplets on virtues and wisdom. It is widely acclaimed for its universal appeal and it is the second most translated book. Thirukural is praised as the holy book for the world (pothumarai). Its all inclusivity, secular thoughts, humane values, worldly wisdom, thoughts on governance, and nature makes it a universal guide. It's period dates back to 500 BCE and many scholars from parimelarazhagar to Solomon papaya have written commentaries for it. Of the commentaries, Thirukural Karunanidhi's commentary holds a unique place owing to his Dravidian thoughts background. He applies various rhetorical devices and radical (Dravidian) thoughts to comment on the ancient verse.

**Key Words:** Tamil Literature, Ethical Literature, Thirukural, Thirukural Karunanidhi's commentary, Dravidian thoughts, Rhetorical devices

**References**

1. Kalaingar M.Karunanidhi, Thirukkural Karunanidhi Urai, Thirumagal Nilayam, Chennai, 1996.
2. Appadhurai, Thirukkural mani vilakka urai, Alamelu Nilayam, Chennai, 1967.
3. Arunachala kavirayar, M.R. Deiva pulamai Thiruvalluvanar Aruli seitha Thirukkural muulamum, Theli porul Vasanamum, Minaloshini, Pathipagam, Madurai.
4. Alagappan, V.S. Valluvarum Agathurayum, 5th Seminar Proceeding, Chennai Presidency College, (Tamil Department), Annamalai Nagar, Chennai, 1973.
5. Sarangabani, R, Thirukkural Urai Vetrumai, Arathupaal, Annamalai, Chidambaram, 1989.
6. Sarangabani, R., Thirukkural Urai Vetrumai, Porutpaal, Annamalai University, Chidambaram.1989.
7. Sarangabhani, R, Thirukkural Urai Vetrumai, Inpathupaal, Annamalai University Chidambaram, 1989.
8. Chandrasekaran, R, Thirukural Karuthiyal Valam, Bharathiyar Library, Coimbatore. 2003.
9. Manikkam, V.S., Vurainerigal, Kalaikathir, Coimbatore, 1973.

# கலைஞர் மு.கருணாநிதியின் திருக்குறள் உரைநெறிகள்

*முனைவர் பி. ஸ்ரீதேவி*
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி), ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்

***ஆய்வுச்சுருக்கம்:*** *உலக மக்களின் உயர் வாழ்விற்கு வழிகாட்டும் சீரிய கருத்துக் குவியல்களை வாரி வழங்கும் இலக்கியப் பூங்காதான் திருக்குறள். "அனைத்து நிலையினரையும் உட்கொண்ட பல நிலைக் குறள்களின் தொகுதியாதலால் திருக்குறள் பொதுநூல் எனப்படும். இது, எல்லா மொழியாளர்களுக்கும். எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்படியான பொதுத்தன்மை வாய்ந்தது. பொதுமை அறம் பூண்டு புகழ்புரிந்த பாவலர் வள்ளுவர். மனிதன் வாழ்வாங்கு இறைமை நிலைக்கு உயர்தல் வேண்டும் என்ற பெருநோக்கில் திருக்குறளை அவர் வழங்கியுள்ளார். கலைஞர் உரையின் எளிய நடையும், இனிய தமிழும் பாமரர் புரிந்துகொள்ளும் தன்மைக்குத் துணைசெய்வனவாகும். குறளின் கருத்தைப் பாமர மக்கள் புரிந்துகொள்ள எளிய நடை கலைஞர்க்குக் கருவிகளாயின. பன்முகப் பார்வையோடு கலைஞர் கூறிய புதிய சிந்தனைகள் பண்டிதரும் படித்து வியக்கும்வண்ணம் அமைந்துள்ளன. பண்டிதர்கள் வியக்கும் வண்ணமும், பாமரர்கள் புரிந்துகொள்ளும் விதத்திலும் கலைஞர் உரை இருப்பதே உரையின் தனித்தன்மையாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழிலக்கியம், திருக்குறள், திருவள்ளுவர், கலைஞர் உரை, தமிழிலக்கியம், அற இலக்கியம்.*

## முன்னுரை

திருக்குறளுக்கு உரை எழுதியவர்களின் வரிசையில் திருக்குறளுக்குப் புதுமையாக உரைகாவியம் தீட்டியவர் கலைஞர். அவரது உரையில் காணப்படும் பண்புகளைக் காணலாம்.

திருக்குறளுக்கு உரை எழுதுவதன் அருமைப்பாட்டைக் கலைஞர் விளக்கியுள்ளார். இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியில் ஈடுபடுவதும், திருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்றுதான் என்றும், திருக்குறளுக்கு உரை எழுதுவோர் மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகள் யாவை என்பதையும் அம்முகவுரையில் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

1. திருவள்ளுவர் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள், பண்பாடுகள், அவை குறித்த அவரது பார்வை ஆகியவற்றிற்கு மாறுபடாமல் உரை இருக்க வேண்டும்.
2. உரையாசிரியர் தம் கருத்து எதையும் வலிந்து திணிக்கக் கூடாது.
3. உரையாசிரியர்கள் சொன்ன பொருளன்றித் தமிழில் மற்றொரு பொருளும் இருக்கிறது என்ற உண்மைநிலை, உரையில் கடைபிடிக்கப் பெறல் வேண்டும்.
4. தாம் எண்ணியது போல் திருவள்ளுவர் எண்ணினாரா என்று நோக்காமல் திருவள்ளுவர் எண்ணி எழுதியது என்ன என்பதை அறிவதில் அக்கறை கொண்டு உரை எழுத வேண்டும்.
5. திருவள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் என்ற வாதத்திற்குள் சிக்க வைப்பது விரும்பக்கூடியது அல்ல.

இவ்வாறு தாமே வகுத்துக்கொண்ட உரை நெறிகளுக்கோற்ப கலைஞர் திருக்குறளுக்குச் சிறப்பான, நடைமுறைக்கு ஏற்புடைய அருமையான உரையைப் படைத்துள்ளார்.

### உரையின் தனித்தன்மை

கலைஞர் உரை பல தனித்தன்மைகளைக் கொண்டு இலங்குவதைக் காணலாம். எந்த நோக்கோடு உரையாளர், உரை எழுத முன் வருகிறாரோ, அந்த நோக்கமே தனித்தன்மையாக மலரும் என்பது இலக்கியப் பேருண்மையாகும் கலைஞரின் உரையும் தனித்தன்மைகள் சுட்டும் வகையில் காணப்படுகிறது.

கலைஞர் தம்முடைய கொள்கை நோக்கினைச், சமுதாயமும், குறிப்பாக இளைய சமுதாயமும், திராவிட இயக்க இளைய சமுதாயமும், உணர்ந்து எழுச்சி பெறச் செய்யும் வகையில் எளிய நடை, இனிய தமிழ், சுருக்கச் சுவை ஆகியனவற்றை கையாண்டுள்ளார்.

தினத்தந்தியின் சி.பா. ஆதித்தனார் பிறந்தநாள் விருதான "மூதறிஞர் விருது" கலைஞருக்குக் கொடுக்கப்பட்ட போது பா. சிவந்தி ஆதித்தனார் குறிப்பிட்ட செய்திகள் கவனிக்கத்தக்கன. திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். சில உரைகளுக்கு அகராதியைப் பார்த்து தான் அர்த்தம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், அண்மையில் கலைஞர் எழுதிய திருக்குறள் உரை, பண்டிதர்கள் வியக்கும் வண்ணமும், பாமரர்கள் புரிந்துகொள்ளும் விதத்திலும் அமைந்துள்ளன என்று பா.சிவந்தி ஆதித்தன் கூறியமை "கலைஞர் உரை" பற்றிய, எளிமையாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒருவகையான திறனாய்வாகும்.

பன்முகப் பார்வையோடு கலைஞர் கூறிய புதிய சிந்தனைகள் பண்டிதரும் படித்து வியக்கும்வண்ணம் அமைந்துள்ளன. எனவேதான், பண்டிதர்கள் வியக்கும் வண்ணமும், பாமரர்கள் புரிந்துகொள்ளும் விதத்திலும் கலைஞர் உரை இருப்பதே உரையின் தனித்தன்மையாகும்.

### முதல் அதிகாரத்திற்குக் கலைஞர் உரை

பகுத்தறிவாளர் நோக்கில் உரைவகுக்கப் புகுந்த கலைஞர் கடவுள் உண்மை பற்றிய சிந்தனையை ஒதுக்கி வைத்துவிட்டு உரை வகுப்பதாக முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். "கடவுள் வாழ்த்து" எனும் அதிகாரத் தலைப்பை "வழிபாடு" எனக் குறித்துள்ளேன். வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாதத்திற்குள் சிக்க வைக்க நான் விரும்பவில்லை. "வழிபாடு" எனும் அதிகாரத்தில் அமைந்துள்ள குறட்பாக்களுக்கு நான் எழுதியுள்ள உரைகளைக் கொண்டு இதனை உணரலாம் என்கிறார். அவரது உரை கீழ்க்கண்டவாறு அமைகின்றது.

1. குறட்பா: 1 ஆதி பகவனுக்கு வேறு விளக்கம் இல்லை. ஆதிபகவன் என்றே உரையில் உள்ளது.
2. குறட்பா: 2 வாலறிவன் - தன்னை விடஅறிவில் மூத்த பெருந்தகையாளர். நற்றாள் தொழுதல் - முன்னே வணங்கி நிற்கும் பண்பு.
3. குறட்பா: 3 மலர்மிசை ஏகினான் - மலர் போன்ற மனத்தில் நிறைந்தவன். அடி சேர்ந்தார் பின்பற்றுவோர். அவன் யார்? என்பது பற்றிக் குறிப்பிடவில்லை.
4. குறட்பா: 4 வேண்டுதல் வேண்டாமை இலானடி - விருப்பு வெறுப்பற்றுத் தன்னலம் இன்றித் திகழ்கின்றவர்.
5. குறட்பா: 5 இறைவன் பொருள் சேர் பகழ் புரிந்தார் - இறைவன் என்பதற்கு உரிய பொருளைப் புரிந்துகொண்டு புகழ் பெற விரும்புகின்றவர்கள். இங்கு இறைவனுக்கு விளக்கம் இல்லை. உண் மையாகவும், இன்மையாகவும் கருத இடம் தரும் இறை எனக் கொள்ளலாம். "இறைவன்" என்பதற்குரிய பொருள் பகுத்தறிவாளர் கொள்ளும் இன்மைப் பொருளாகவும் இருக்கலாம்.
6. குறட்பா: 6 பொறிவாயில் ஐந்தவித்தான் - ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவன்.
7. குறட்பா: 7 தனக்கு உவமை இல்லாதான் - ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவன். தாள் சேர்ந்தார் - அடி ஒட்டி நடப்பார்கள்.

8. குறட்பா: 8 அறவாழி அந்தணன் - அறக்கடலாகவே விளங்கும் சான்றோர். பிற ஆழி - பிற துன்பக் கடல்கள்.
9. குறட்பா: 9 எண் குணத்தான் - ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவன். தாளை வணங்கல் - வணங்கி நடத்தல். எண் குணத்தான் என்ற தொடரில் அமைந்துள்ள எண் என்னும் சொல்லுக்கு, எண்ணத்தக்க, மதிக்கத்தக்க என்று பொருள் சொல்லப்படுகிறது போலும். எண் என்றால் எட்டு எனக் கொள்ளப்படவில்லை.
10. குறட்பா: 10 இறைவன் - தலையானவனாக இருப்பவன். அடி சேராதார் - அடி தொடர்ந்து செல்லாதார்.
11. குறள் : 5 இல் கூறிய இறைவன் என்பதற்கும், குறள் 10 இல் கூறியுள்ள இறைவன் என்பதற்கும் பொருள் மாறுபடுவது போல் உள்ளது. தலையானவனாக இருப்பவன் என்பது தெளிவான பொருளைத் தருகிறது. ஆனால், இறைவன், என்பதற்குரிய பொருளைப் புரிந்துகொண்டு புகழ் பெற விரும்புகிறவர்கள் என்று கூறும் பொழுது இரு இடங்களிலும் பொருள் முரண்படுவதும் கவனிக்கத்தக்கது.

**அதிகாரத் தலைப்பில் கவனம் செலுத்துதல்**

அதிகாரத் தலைப்புகளில் கலைஞர் காட்டியுள்ள அக்கறை சுட்டத்தக்கது. தலைப்புகளில் அவர் காட்டியுள்ள அக்கறை பெரிதும் கவனத்திற்குரியது.

முப்பால் பிரிவுகளும், இயல்வகைகளும், அதிகார வைப்பு முறையும், குறள் வரிசை முறையும் எவரால் அமைக்கப்பட்டவை என்பதற்கு ஆதாரம் இல்லை. வள்ளுவரே இவை அனைத்தையும் சொல்லியிருக்க வாய்ப்புண்டு என நம்பிக்கையைக் கொள்ளலாமாயினும், அதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள உற்ற துணையில்லை. தற்போதைய அமைப்பு முறை எப்போது ஏற்கப்பட்டதாக இருப்பினும், அதுவே குறளமைப்பு என இலக்கிய உலகம் ஏற்றுக் கொண்டது.

அந்த வகையில் அதிகாரத் தலைப்புகள் எல்லாமே எல்லா உரையாசிரியர்களாலும், சின்னஞ்சிறு மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைகளாக இருப்பினும் ஏற்கப்பட்டவைகளே!

பழைய உரையாசிரியர்கள் அனைவராலுமே, அதிகாரத் தலைப்பிற்குப் பொருளும் விளக்கமும், முன்பின் அதிகாரங்களோடு கொண்டுள்ள தொடர்பும் கூறப்பட்டுள்ளன.

பிற்கால உரையாசிரியர்களில் பெரும்பாலோர் அதிகாரத் தலைப்பிற்கான பொருளைக் கூறாமலேயே, அதிகாரக் குறட்பாக்களுக்கு உரை சொல்லிச் செல்கின்றனர்.

கடவுள் வாழ்த்து என்பது அதிகாரத் தலைப்பு? உரை கூறும் போதும், குறட்பாக்களுக்கு உரை கூறும் அறிஞர் மு.வ. கடவுள் வாழ்த்து என்னும் அதே தலைப்பின் கீழ்தான் உரை கூறியுள்ளார்.

புலவர் குழந்தை அதிகாரத்தின் தலைப்பின் கீழே பொருளை விளக்கிப் பிறகு குறட்பாக்களின் உரையைத் தொடர்ந்து தருகிறார்கள். பாவாணர் பழைய உரையாளர் தம் போக்கிலேயே உரை தந்துள்ளார்கள்.

கலைஞர் இம்முறையிலும் மாற்றத்தைக் கண்டுள்ளார். 133 அதிகாரங்களின் பொருளைக் கூறாமல், அதிகார அருஞ்சொற்பொருள் அகர வரிசை எனத் தனியாகப் பிரித்துப் பொருள் கூறியுள்ளார்.

எல்லா அதிகாரத் தலைப்புகளுக்கும் பொருள் கூறத் தேவையில்லை என்று எண்ணினார்

போலும்! ஆதலால் 62 அதிகாரங்களுக்கு மட்டுமே அருஞ்சொற்பொருள் கூறியுள்ளார். அப்போதும், எளிமை புரிதல் என்னும் நோக்கப்படிதான் உரை கண்டுள்ளார்.

"அலர் அறிவுறுத்தல்" - ஊரார் கேலி புரிதல்" என்றும்,

"அவர் வாயின் விதும்பல்" - "காதலரைக் காணத்துடித்தல்" எனவும்,

"அவா அறுத்தல்" - "பேராசை விலக்கல்" எனவும்,

"இறை மாட்சி" - அரசின் சிறப்பு" எனவும்,

"இடுக்கண் அழியாமை" - "துன்பத்திற்குக் கலங்காமை" எனவும், எளிமையாக, எளியோர்க்குப் புரிய வைத்துள்ளார். "ஒப்புரவறிதல்" என்னும் அதிகாரத்திற்கே,

1. "பொதுநலம் அறிதல்" என்கிறார் மதுரை இளங்குமரனார்;
2. "சமநிலை அறிவு" என்கிறார் கு.ச.ஆனந்தன்;
3. "பிறர்க்கு உதவுவது" என்கிறார் சுஜாதா;
4. "உலக நடையினை அறிந்து செய்தல்" என்கிறார் பரிமேலழகர்; அத்துடன், உலக நடை வேத நடை போல்; அறநூல்களுக் கூறப்படுவதன்றித் தாமேயறிந்து செய்யுந்தன்மைத் தாகலின் ஒப்புரவறிதல் என்றார்
5. "உலக நடையினை அறிந்து பிறர்க்குப் பயன்பட்டு வாழ்தலாகும் என்கிறார் வீ.முனிசாமி.
6. ஒப்புரவறிதல் என்பது, உலகத்தின் போக்கை உணர்ந்து, இல்லாதவர்களுக்கு உள்ளவர்கள் உதவிசெய்து, உலக வாழ்வை ஒழுங்குபடுத்திச் சமன் செய்தல் எனப்படும் என்கிறார் நாவலர்.

ஒப்புரவறிதல் பற்றி அறிஞர்கள் கருத்துகள் எல்லாமே, சுருக்கம், விரிவு என வடிவத்தால் வேறுபட்டிருப்பினும் சற்றேறக்குறைய அனைவர் தம் கருத்தும், சிற்சில வேறுபாடுகளோடு ஒரு தன்மையாகவே உள்ளன.

இதற்கே, "சமுதாய நலம் நாடுதல்" எனும் மூன்றே சொற்களால் அனைவர்தம் உணர்விலும் அடிப்படையாய்ப் பொங்கும் கருவைக் கலைஞர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

கலைஞர் உரைக்குப் பதிப்புரை வழங்கிய மா.நன்னன், இக்காலத்துத் தமிழன் ஒரு குறளைப் படித்தால் எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதை இற்றெனக் கிளர்ந்து தெற்றெனக் காட்டுவதையே தம் உத்தியாகக் கையாண்டுள்ளார்.

எனக் குறிப்பிடுகின்றார். இக்கருத்து கலைஞரின் உரைக்குப் பொருந்தியுள்ளது.

கலைஞர் பல குறட்பாக்களுக்கு இரண்டு வரிகள் அல்லது அதற்கும் குறைவான அளவில் உரை கண்டுள்ளார்.

**சுருக்க உரைகள்**

திருக்குறள் கலைஞர் உரையில் மொத்தம் 169 குறட்பாக்களுக்குச் சுருக்க உரைகள் காணப்படுகின்றன. அவை:

அறத்துப்பால் - 68
பொருட்பால் - 82
இன்பத்துப்பால் - 20
மொத்தம் - 170

**அறத்துப்பால்**

| குறள் | பக்கம் | அதிகாரம் |
|---|---|---|
| 1 | 1 | வழிபாடு |
| 11 | 3 | வான்சிறப்பு |
| 13,14,16 | 4 | வான்சிறப்பு |
| 27 | 6 | நீத்தார் பெருமை |
| 34 | 7 | அறன் வலியுறுத்தல் |

| | | |
|---|---|---|
| 49 | 10 | இல்வாழ்க்கை |
| 61 | 13 | மக்கட்பேறு |
| 73,74 | 15 | அன்புடைமை |
| 78,79 | 16 | அன்புடைமை |
| 87 | 18 | விருந்தோம்பல் |
| 92,93,94 | 19 | இனியவை கூறல் |
| 106,110 | 22 | செய்ந்நன்றியறிதல் |
| 112 | 23 | நடுவுநிலைமை |
| 121 | 25 | அடக்கம் உடைமை |
| 137,138,139 | 28 | ஒழுக்கம் உடைமை |
| 150 | 30 | பிறனில் விழையாமை |
| 154 | 31 | பொறையுடைமை |
| 158 | 32 | பொறையுடைமை |
| 161 | 33 | அழுக்காறாமை |
| 168 | 34 | அழுக்காறாமை |
| 191,192,194 | 39 | பயனில சொல்லாமை |
| 199,200 | 40 | பயனில சொல்லாமை |
| 209 | 42 | தீவினையச்சம் |
| 212 | 43 | ஒப்புரவறிதல் |
| 223 | 45 | ஈகை |
| 227,230 | 46 | ஈகை |
| 231,232,233 | 47 | புகழ் |
| 240 | 48 | புகழ் |
| 243 | 49 | அருளுடைமை |
| 257,258 | 52 | புலால் மறுத்தல் |
| 268 | 54 | தவம் |
| 287 | 58 | கள்ளாமை |
| 291 | 59 | வாய்மை |
| 304 | 61 | வெகுளாமை |
| 309,310 | 62 | வெகுளாமை |
| 323,324 | 65 | சொல்லாமை |
| 327,329 | 66 | சொல்லாமை |
| 331 | 67 | நிலையாமை |
| 338,340 | 68 | நிலையாமை |
| 347 | 70 | துறவு |
| 351,352 | 71 | மெய்யுணர்தல் |
| 357,360 | 72 | மெய்யுணர்தல் |
| 361,364,365 | 73 | அவா அறுத்தல் |
| 369 | 74 | அவா அறுத்தல் |

அறத்துப்பாலில் மட்டும் 32 அதிகாரங்களில் சுமார் 68 குறட்பாக்களுக்கு சுருக்க உரைகள் வழங்கியுள்ளார். இதில் செய்ந்நன்றியறிதல், ஒழுக்கம் உடைமை, ஈகை, வெகுளாமை போன்ற அதிகாரங்களில் முறையே 3 குறட்பாக்களுக்குச் சுருக்க விளக்கம் அளித்துள்ளார்.

வான்சிறப்பு, அன்புடைமை, புகழ், கொல்லாமை, மெய்யுணர்தல், அவா அறுத்தல் போன்ற அதிகாரங்களில் முறையே நான்கு குறட்பாக்களுக்குச் சுருக்க விளக்கம் தந்துள்ளார்.

பயனில சொல்லாமை என்னும் ஒரு அதிகாரத்திலிருந்து மட்டும் ஐந்து குறட்பாக்களுக்குச் சுருக்க விளக்கம் அளித்துள்ளார்.

## பொருட்பால்

| குறள் | பக்கம் | அதிகாரம் |
|---|---|---|
| 386,387 | 78 | இறைமாட்சி |
| 398,400 | 80 | கல்வி |
| 402 | 81 | கல்லாமை |
| 408,409 | 82 | கல்லாமை |
| 412 | 83 | கேள்வி |
| 421 | 85 | அறிவுடைமை |
| 426,429 | 86 | அறிவுடைமை |
| 431 | 87 | குற்றங்கடிதல் |
| 437 | 88 | குற்றங்கடிதல் |
| 441 | 89 | பெரியாரைத் துணைக்கோடல் |
| 447,448 | 90 | பெரியாரைத் துணைக்கோடல் |
| 456,457 | 92 | சிற்றினம் சேராமை |
| 466,467 | 94 | தெரிந்து செயல்வகை |
| 477,478 | 96 | வலியறிதல் |
| 484 | 97 | காலமறிதல் |
| 494 | 99 | இடனறிதல் |
| 531,532 | 107 | பொச்சாமை |

| | | |
|---|---|---|
| 537 | 108 | பொச்சாமை |
| 544 | 109 | செங்கோன்மை |
| 547 | 110 | செங்கோன்மை |
| 554,555 | 111 | கொடுங்கொன்மை |
| 563 | 113 | வெருவந்த சய்யாமை |
| 566,568 | 114 | வெருவந்த செய்யாமை |
| 575 | 115 | கண்ணோட்டம் |
| 579 | 116 | கண்ணோட்டம் |
| 581 | 117 | ஒற்றாடல் |
| 592,594 | 119 | ஊக்கம் உடைமை |
| 598 | 120 | ஊக்கம் உடைமை |
| 602,603 | 121 | மடிஇன்மை |
| 607 | 122 | மடிஇன்மை |
| 616 | 124 | ஆள்வினை உடைமை |
| 625 | 125 | இடுக்கண் அழியாமை |
| 641 | 129 | சொல்வன்மை |
| 656 | 132 | வினைத்தூய்மை |
| 664 | 133 | வினைத்திட்பம் |
| 682 | 137 | தூது |
| 688 | 138 | தூது |
| 706 | 142 | குறிப்பறிதல் |
| 734 | 147 | நாடு |
| 740 | 148 | நாடு |
| 756 | 152 | பொருள் செயல் வகை |
| 779 | 156 | படைச்செருக்கு |
| 786 | 158 | நட்பு |
| 801 | 161 | பழைமை |
| 809 | 162 | பழைமை |
| 819 | 164 | தீ நட்பு |
| 824 | 165 | கூடா நட்பு |
| 835 | 167 | பேதைமை |
| 846 | 170 | புல்லறிவாண்மை |
| 861 | 173 | பகைமாட்சி |
| 889 | 178 | உட்பகை |
| 892 | 179 | பெரியாரைப் பிழையாமை |
| 916 | 184 | வரைவின் மகளிர் |
| 922 | 185 | கள்ளுண்ணாமை |
| 946,947 | 190 | மருந்து |
| 967 | 194 | மானம் |
| 971,972 | 195 | பெருமை |
| 976 | 196 | பெருமை |
| 982 | 197 | சான்றாண்மை |
| 988 | 198 | சான்றாண்மை |
| 999 | 200 | பண்புடைமை |
| 1013 | 203 | நாணுடைமை |
| 1026 | 206 | குடி செயல் வகை |
| 1034 | 207 | உழவு |
| 1040 | 208 | உழவு |
| 1041,1045 | 209 | நல்குரவு |

பொருட்பாலில் மட்டும் 50 அதிகாரங்களில் சுமார் 82 குறட்பாக்களுக்கு சுருக்க விளக்கம் அளித்துள்ளார். இதில் முறையே, கல்லாமை, அறிவுடைமை, பெரியாரைத் துணைகோடல், பொச்சாமை, வெருவந்த செய்யாமை, மடியின்மை, ஊக்கமுடைமை போன்ற அதிகாரங்களில் முறையே மூன்று குறட்பாக்களுக்குச் சுருக்க விளக்கம் அளித்துள்ளார்.

பிற அதிகாரங்களில் உள்ள குறட்பாக்கள் ஒன்றிரண்டிற்கு மட்டுமே சுருக்க உரை வகுத்துள்ளார்.

### இன்பத்துப்பால்

| குறள் | பக்கம் | அதிகாரம் |
|---|---|---|
| 1081 | 217 | தகை அணங்குறுத்தல் |
| 1090 | 218 | தகை அணங்குறுத்தல் |
| 1092 | 219 | குறிப்பறிதல் |
| 1111 | 223 | நலன்புனைந்து உரைத்தல் |
| 1116 | 224 | நலன்புனைந்து உரைத்தல் |
| 1122 | 225 | காதற் சி றப்புரைத்தல் |
| 1139 | 228 | நாணுத்து றவுரைத்தல் |
| 1150 | 230 | அலர் அறிவுறுத்தல் |

| | | |
|---|---|---|
| 1161 | 233 | படர் மெலிந்திரங்கல் |
| 1166 | 234 | படர் மெலிந்திரங்கல் |
| 1995 | 239 | தனிப்படர் மிகுதி |
| 1214 | 243 | கனவு நிலை உரைத்தல் |
| 1216,1219 | 244 | கனவு நிலை உரைத்தல் |
| 1227 | 246 | பொழுது கண்டு இரங்கல் |
| 1265 | 253 | அவர் வயின் விதும்பல் |
| 1281,1282 | 257 | புணர்ச்சி விதும்பல் |
| 1289 | 258 | புணர்ச்சி விதும்பல் |
| 1305 | 261 | புலவி |

இன்பத்துப்பாலில் மட்டும் பதின்மூன்று அதிகாரங்களில் சுமார் இருபது குறட்பாக்களுக்கு சுருக்க விளக்கம் அளித்துள்ளார்.

கனவுநிலைவுரைத்தல், புணர்ச்சி விதும்பல் ஆகிய இரண்டு அதிகாரங்களுக்கு முறையே மூன்று குறட்பாக்களுக்கு சுருக்க உரை அமைத்துள்ளார். ஏனைய அதிகாரங்களில் உள்ள குறட்பாக்கள் ஒன்றிரண்டிற்கு சுருக்க விளக்கம் அமைத்துள்ளார்.

### மிகச் சுருக்க உரைகள்

பின்வரும் மூன்று குறட்பாக்களுக்கு மிகவும் சுருக்கமான உரைகள் வரைந்திருப்பது, கலைஞரின் தமிழ்ப் புலமைக்கோர் எடுத்து க்காட்டாகும்.

**ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்**

**(குறள்.14)**

மழை என்னும் வருவாய் குன்றிவிட்டால், உழவுத் தொழில் குன்றிவிடும்.

**அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்ப தில்லாயின் நன்று**

**(குறள்.49)**

பழிப்புக்கு இடமில்லாத இல்வாழ்க்கை இல்லறம் எனப் போற்றப்படும்

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்**

**(குறள்.121)**

அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை வாழ்வையே இருளாக்கி விடும்.

**அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண்**

**(குறள்.421)**

பகையால் அழிவு வராமல் பாதுகாக்கும் அரண், அறிவு ஒன்று தான்.

**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்**

**(குறள்.448)**

குறையை உணர்த்துவோர் இல்லாத அரசு தானாகவே கெடும்.

**மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்**
**கற்றா ரனைத்திலர் பாடு.**

**(குறள்.409)**

கற்றவர் என்ற பெருமை; உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டைப் போக்கி விடும்.

### இடைமிடை சொல் நலம் பேணல்

இடையில் சில சொற்களைச் சேர்ப்பதன் வாயிலாகக் குறளின் பொருள் நேரும் முட்டறுக்கும் பெற்றியைக் கூட்டுதலை, “இடைமிடை சொல் நலம்” என்று பேராசிரியர் ம.நன்னன் சுட்டுகிறார். இத்தகைய இடைமிடை சொல்நலங்கள் கலைஞர் அவர்களின் சுருக்க உரைகளில்கூடக் காணப்படுகிறது. அவை:

**துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

**(குறள்.94)**

இன்சொல் பேசி எல்லாரிடத்திலும் கனிவுடன் பழகுவோர்க்கு நட்பில் வறுமை எனும் துன்பமில்லை.

இவ்வுரையில் "நட்பில்" எனும் இடைமிடைச் சொல் இடம் பெறும் சிறப்பைக் காணமுடிகிறது.

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்.**

**(குறள்.200)**

பயனில்லாத சொற்களை விடுத்து மனதில் பதிந்து பயனளிக்கக்கூடிய சொற்களையே கூற வேண்டும்.

இவ்வுரையில் "மனதில் பதிந்து" என்ற இடைமிடை சொற்கள் இடம்பெறும் சிறப்பைக் காணமுடிகிறது.

**காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்.**

**(குறள்.386)**

காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசைத்தான் உலகம் புகழும்.

இவ்வுரையில், "இனிய பண்பாடும் உடைய" என்ற இடைமிடை சொற்கள் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

**நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்**
**கொல்லாமை சூழும் நெறி.**

**(குறள்.324)**

எந்த உயிரையும் கொல்லக் கூடாது எனும் நெறி காப்பது தான் நல்லற வழி எனப்படும். இவ்வுரையில் "நெறி காப்பது தான்" என்ற இடை மிடை சொற்கள் இடம் பெறும் சிறப்பைக் காணமுடிகிறது.

## அடைமொழிகள் பயன்படுத்துதல்

சுருக்கஉரைகள்சிலவற்றில்அடைமொழிகளைக் கலைஞர் அவர்கள் கையாண்டுள்ள சிறப்பையும் காணமுடிகிறது. அவை:

**நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை**
**போற்றி யொழுகப் படும்.**

**(குறள்.154)**

பொறுமையின்உறைவிடமாக இருப்பவரைத்தான் நிறைவான மனிதர் என்று உலகம் புகழும்.

இவ்வுரையில் "நிறைவான" எனும் அடைமொழியை "மனிதர்" என்ற சொல்லின் முன் சேர்த்துள்ள சிறப்பைக் காண முடிகிறது.

**ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல**
**தூதிய மில்லை உயிர்க்கு.**

**(குறள்.231)**

கொடைத்தன்மையும், குன்றாத புகழும் தவிர வாழ்க்கைக்கு ஆக்கம் தரக்கூடியது வேறெதுவும் இல்லை.

இவ்வுரையில் "குன்றாத" எனும் அடைமொழியைப் "புகழுக்கு" என்ற சொல்லின் முன்சேர்ந்துள்ளசிறப்பைக்காணமுடிகிறது.

**வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**
**தீமை யிலாத சொலல்.**

**(குறள்.291)**

பிறருக்கு எள் முனையளவு தீமையும் ஏற்படாத ஒரு சொல்லைச் சொல்வது தான் வாய்மை எனப்படும்.

இவ்வுரையில் "எள்முனையளவு" எனும் அடைமொழி "தீமையும்" என்ற சொல்லிற்கு முன் சேர்க்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு.**

பசியும், பிணியும், பகையுமற்ற நாடுதான் சிறந்த நாடு எனப் பாராட்டப்படும். இவ்வுரையில் "சிறந்த" எனும் அடைமொழி "நாடு" என்ற சொல்லிற்கு முன் சேர்க்கப்பட்டுள்ளது.

### நாத்திகம் சார்ந்து உரை எழுதுதல்

திருக்குறளுக்கு நாத்திகம் சார்ந்த உரைகண்ட திராவிட இயக்கத்தவர்களில் கலைஞரும் ஒருவர். கலைஞரின் திருக்குறள் உரையில் நாத்திகம் சார்ந்த பண்பு காணப்படுகிறது.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து**

***(குறள்.398)***

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாது காப்பாக அமையும்.

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக் கழுந்தும் அளறு.**

***(குறள்.835)***

தன்னிச்சையாகச் செயல்படும் பேதை எக்காலத்திலும் துன்பமெனும் சகதியில் அழுந்திக் கிடக்க நேரிடும்.

பிற உரையாசிரியர்களின் உரையினின்று வேறுபட்டு இருப்பினும், பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் ஏற்கக் கூடியவையாய் உள்ளன.

### புதிய சொற்கள்

பிற உரையாசிரியர்கள் கையாளாத சில புதிய சொற்களைக் கலைஞர் அவர்கள் தம் சுருக்க உரைகளில் கையாண்டுள்ளார்கள்.

**தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்**
**புன்னலம் பாரிப்பார் தோள்.**

***(குறள்.916)***

புகழ்ச்சிக்குரிய சான்றோர் எவரும், இகழ்ச்சிக்குரிய இன்பவல்லிகளின் தோளில் சாய்ந்து கிடக்க மாட்டார்.

இவ்வுரையில், "இன்ப வல்லிகள்" என்ற புதுமையான சொல்லைக் கையாண்டுள்ளது. கலைஞரின் மொழிநயத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

**நிலத்தகை நல்லவர்க் கோர் புலத்தகை**
**பூவன்ன கண்ணார் அகத்து.**

***(குறள்.1305)***

மலர்விழி மகளிர் நெஞ்சில் விளையும் ஊடலே பண்பார்ந்த நல்ல காதலர்க்கு அழகு சேர்க்கும்.

இவ்வுரையில், பூவன்ன கண்ணார்" என்ற இரண்டு சீர்களுக்கு "மலர்விழி" என்ற புதிய சொல்லைக் கூறியுள்ளார். இன்பத்துப் பாலின் குறளுக்கான இப்பொருள் மேலும் இன்பத்தை வழங்குவதாய் அமைகிறது.

### முடிவுரை

கலைஞரின் திருக்குறள் உரை கலைநயத்தோடு எளிய நடையில் ஏற்ற இடங்களில் உவமை நயங்களோடு அமைந்துள்ளது. நல்ல தலைப்புக்களோடு, புதுமை நயத்தோடு செறிந்ததாய் காணப்படுகிறது. தமது கொள்கை சார்ந்த புதிய பொருள்களில் பலவிதக் கூற்றுக்களிலும் பொருளை அமைத்து. தனித்துவ மிக்க நடையாகவும், சுட்டத்தகும் நடையாகவும் சிறத்தலைக் காணமுடிகிறது.

### துணைநின்றநூல்கள்


1. கலைஞர் மு. கருணாநிதி - திருக்குறள் கருணாநிதி உரை, திருமகள் நிலையம், சென்னை. 1996.
2. கா. அப்பாதுரை - திருக்குறள் மணி விளக்க உரை, அலமேலு நிலையம், சென்னை. 1967.
3. ம.ரா. அருணாசலக்கவிராயர் - தெய்வப்புலமை திருவள்ளுவனார் அருளிச்செய்த திருக்குறள் மூலமும், தெளிபொருள் வசனமும், மீனலோசனி பதிப்பகசாலை, மதுரை.
4. வி.எஸ். அழகப்பன் - வள்ளுவரும் அகத்துறையும், 5-வது ஆய்வுக்கோவை, சென்னை மாநிலக் கல்லூரி, தமிழ்த் துறை வெளியீடு, சென்னை - 1973.
5. இரா.சாரங்கபாணி - திருக்குறள் உரை வேற்றுமை, அறத்துப்பால், அண்ணாமலைப் பல்கலைக்கழக

வெளியீடு, சிதம்பரம் - 1989.
6. இரா. சாரங்கபாணி, திருக்குறள் உரைவேற்றுமை, பொருு; பால், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, சிதம்பரம், 1989.
7. இரா. சாரங்கபாணி, திருக்குறள் உரை வேற்றுமை, இன்பத்துப்பால், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, சிதம்பரம், 1989.
8. இரா. சந்திரசேகரன் - திருக்குறள் கருத்தியல் வளம், பாரதியார் நூல்நிலையம், பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்), கோயம்புத்தூர், 2003.
9. வி. எஸ். மாணிக்கம் - உரை நெறிகள், காலைக்கதிர், கோயம்புத்தூர், 1973.